# 9 ஆக்கிமீடீசு



மன்னன் சைராக் கியூஸ்நாட்டான்
மாற்றுக் குறையாப் பொன்கொடுத்து
பொன்செய் கொல்லன் ஒருவனிடம்
''புதிய முடிசெய் நீ'' என்றான்.

நாட்கள் செல்ல முடியோடு
நாடி வந்தான் பொற்கொல்லன்
நோட்டம் செய்த பேரரசன்
நொடியில் பொன்னிற் கலப்புணர்ந்தான்

ஆக்கிமீடிசு எனும்பெயர்கொள்
அறிவு மிக்க பெரியோனை
நோக்கி வேந்தன் ‘ஐயமிதை
நீக்க வழிகாண்’ எனவுரைத்தான்

முடியின் தூய்மை கண்டறிய
முடிவு காலம் வகுத்திட்டான்
‘‘முடிவு காணா விட்டால்நான்
முடிப்பேன் உனது வாழ்’’ வென்றான்

அல்லும் பகலும் ஆராய்ந்தான்
ஐயம் தீர்க்க வழிகாணான்
மெல்ல ஒருநாள் நீர்த்தொட்டிக்
குள்ளே ஆழ்ந்து மூழ்கினனே

மூழ்கி எழுந்த விஞ்ஞானி
‘‘கண்டேன் கண்டேன்’’ எனக்கூவி
வீழ்ந்தான் எழுந்தான் வீதியெல்லாம்
வேகமாக ஓடினனே

‘‘பொருளை நீரில் ஆழ்த்துகையில்
பொருளைத் தாங்கும் மேலுதைப்புப்
பொருளாற் பெயர்ந்த நீர்நிறைக்குப்
பொருந்தும்’’ என்னும் விதிகண்டான்

முடியின் அளவு பொன்னெடுத்து
நீரில் இட்டுக் கலப்புணர்ந்தான்
முடியின் கலப்பை அரசனிடம்
முடிவாய்க் கூறிப் பரிசேற்றான்.

– ***மயிலங்கூடலூர் பி. நடராசன்*** (ஆடலிறை)

## அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| முடி | - | கிரீடம் |
| பொற்கொல்லன் | - | நகை செய்பவன் |
| நோட்டம் | - | தரமறிதல் |
| நொடி | - | கணப்பொழுது |
| ஐயம் | - | சந்தேகம் |
| மேலுதைப்பு | - | மேல் நோக்கித் தொழிற்படும் விசை |
| பெயர்ந்த | - | நீங்கிய |
| நிறை | - | அளவு |
| விதி | - | நெறி |



### கிரகித்தற் பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. கியூஸ் நாட்டு அரசன் யார்?
2. ஆக்கிமீடீசு கண்டு பிடித்த விஞ்ஞானத் தத்துவம் எது?
3. மன்னன் பொற்கொல்லனுக்கு கொடுத்த வேலை என்ன?
4. இப்பாடலினூடாக வெளிப்படுத்தப்படும் படிப்பினை யாது?
5. விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கும் அரசனின் முடிக்கும் இடையிலான தொடர்பு என்ன?

## மொழித்திறன் விருத்திச் செயற்பாடு

ஆக்கிமீடீசு என்ற பாடலின் பொருளைத் தொகுத்து, கதை வடிவில் எழுதுங்கள்.

# வினைச்சொற்கள் III

## ஏவல் வினை

**தம்பி படி**

இங்கு **படி** எனும் வினை தம்பியைப் படிக்குமாறு ஏவுகின்றது. இவ்வாறு முன்னிலையில் இருப்போரை வினையை நிகழ்த்துமாறு அல்லது நிகழ்த்தாது இருக்குமாறு ஏவுவதற்கு பயன்படுத்தப்படும் வினைச் சொல்லை ஏவல் வினை என்போம். இதனை ஏவல் ஒருமை வினை, ஏவல் பன்மை வினை என இரண்டாகப் பிரிக்கலாம்.

### ஏவல் ஒருமை வினை

நில், நில்லாதே, வா, போ, இரு, எழுதாதீர், நட, செய்துகாட்டு, பார்த்துக்கொள் முதலானவற்றை ஏவல் ஒருமை வினைகள் என்போம்.

### ஏவல் பன்மை வினை

போங்கள், போகாதீர்கள், வாருங்கள், செய்யுங்கள், எடுங்கள், எடுக்காதீர்கள் என்பன ஏவல் பன்மை வினைகள் ஆகும். இவை வினையடியுடன் ஏவல் பன்மை வினை விகுதிகளை கொண்டு அமைகின்றன.

போங்கள் - போ + ங்கள்

செய்யுங்கள் - செய் + உங்கள்

எடுங்கள் - எடு + உங்கள்

## வியங்கோள் வினை

**வாழ்க, ஒழிக, தருக, எழுதுக** முதலான வினைச் சொற்கள் முறையே வாழ்த்தல், வைதல், வேண்டுதல், விதித்தல் பொருளில் வந்துள்ளன. இவ்வாறான வினைச்சொற்களை வியங்கோள் வினை என்போம். வியங்கோள் வினைகள் வினையடியுடன் ‘க’, ‘இய’, ‘இயர்’ ஆகிய விகுதிகளை பெற்று வரும்.இவ்வினைகள் ஐம்பால் மூவிடத்துக்கும் பொதுவாக வரும்.

**உதாரணங்கள் :**

**வாழ்த்தல் - வாழ்க, வாழிய, வாழியர்**

**வைதல் - அழிக, கெடுக**

**விதித்தல் - எழுதுக, பெறுக**
**வேண்டல் - தருக, அருள்க**

தற்காலத்தமிழில் ‘அட்டும்’ என்பதும் வியங்கோள் விகுதியாகப் பயன்படுகின்றன.

**உதாரணங்கள் : வாழட்டும், ஒழியட்டும்**

## பயிற்சி

**1.**பின்வரும் வாக்கியங்களில் வியங்கோள் வினைகள் எப்பொருளில் வந்துள்ளன என்பவற்றைக் குறிப்பிடுக.

1. நீங்கள் நீடூழி காலம் வாழ்க.
2. எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
3. வறுமை ஒழிக.
4. பெருமானே எழுந்தருள்க.
5. உமது பொருள்கள் சிலவற்றைக் கடனாகத் தருக.
6. அறியாமை இருள் அழிக.
7. வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி.
8. இன்பம் பெருகுக.
9. அறிவில் நீ முன்னேறுக.
10. அவர்கள் நீடூழி காலம் வாழட்டும்.

**2.**பின்வரும் வினாக்களுக்குரிய மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1. சிறுவன் உறங்கி எழுந்தான் - **உறங்கி** என்பது
   (முற்றுவினை, குறிப்புவினை, பெயரெச்சம், வினையெச்சம்)
2. செய்யாது விட்டேன் - **செய்யாது** என்பது
   (பெயரெச்சம், வினையெச்சம், வினைமுற்று, குறிப்புவினை)

3. எச்சமாகவும் வினைமுற்றாகவும் வரும் சொல்
(கரையும், வந்தான், ஓடிய, பறந்து)

4. **இனியன்** என்பது
(தெரிநிலைவினை, குறிப்புவினை, எச்சவினை, எதிர்மறைவினை)

5. முன்னிருப்பவரை ஒரு செயலைச் செய்யும்படி பணிப்பது
(தெரிநிலைவினை, குறிப்புவினை, எச்சவினை, ஏவல்வினை)

6. நான் உண்டேன் என்பதில் **உண்டேன்** என்பது
(தன்மைவினைமுற்று, முன்னிலைவினைமுற்று, படர்க்கை வினை முற்று, குறிப்பு வினைமுற்று)

7. உண்பாய் என்பது
(தன்மைவினைமுற்று, முன்னிலைவினைமுற்று, படர்க்கை வினை முற்று, குறிப்பு வினைமுற்று)

8. அவன் அல்லன் என்பதில் **அல்லன்**
(தெரிநிலைவினை, ஏவல்வினை, எச்சவினை, எதிர்மறைவினை)

9. உண்டு வந்த பசு - இதில் **உண்டு** வந்த என்பது
(தெரிநிலைவினை, தெரிநிலைவினைப்பெயரெச்சம், குறிப்புவினை, தெரிநிலைவினையெச்சம்)

# திரிசொல் I

இயற்சொல் போல இயல்பாகப் பொருளை உணர்த்தாது அரிதாகப் பொருள் உணர்த்துவதாக வரும் சொல் திரிசொல் எனப்படும். (திரிதல் - வேறுபடுதல்)

திரிசொல், ஒருபொருள் குறித்த பல சொல்லாகியும், பல பொருள் குறித்த ஒரு சொல்லாகியும் வரும்.

## ஒரு பொருள் குறித்த பல சொல்

குழந்தை அழுதது
குழவி அழுதது
சேய் அழுதது
மகவு அழுதது
சிசு அழுதது

மேலே உள்ள வாக்கியங்களில் குழந்தையைக் குறிக்க, **குழவி, சேய், மகவு, சிசு** முதலான பல சொற்கள் வந்துள்ளன. இவ்வாறு ஒரு பொருளைக் குறிக்கும் பல சொற்களையே ஒரு பொருள் குறித்த பல சொற்கள் என்போம்.

அடி : கழல், கால், தாள், பதம், பாதம்.

அழகு : அணி, எழில், கவின், சுந்தரம், வடிவு, வனப்பு.

அன்பு : நேசம், பற்று, பரிவு, பாசம், ஈரம்.

ஆகாயம் : அண்டம், அந்தரம், உம்பர், சேண், வான், விண், விசும்பு.

ஆசிரியர் : ஆசான், உபாத்தியாயன், குரவன், தேசிகன்.

இனம் : கிளை, சுற்றம், பரிசனம், உறவு, ஒக்கல்.

உடம்பு : உடல், காயம், மெய், மேனி, யாக்கை.

ஒளி : பிரகாசம், காந்தி, சுடர், சோதி, கதிர்.

காற்று : ஊதை, கால், பவனம், மாருதம், வளி.

சோலை : உபவனம், கா, தண்டலை, நந்தவனம், பூங்கா, பொழில்.

தோழன் : நண்பன், சினேகிதன், பாங்கன், துணைவன்.

நீதி : தருமம், நீதம், நடு, நியாயம், நெறி.

நூல் : ஏடு, பனுவல், புத்தகம், பொத்தகம்.

வயல் : களனி, செறு, செய், பண்ணை, பழனம்.

வாசனை : கந்தம், கடி, நாற்றம், விரை, மணம்.

## பயிற்சி

**1.** பின்வரும் சொற்களைக் குறிக்க வழங்கும் வேறு இரண்டு சொற்கள் தருக.

1. தாமரை
2. போர்
3. பகைவர்
4. நெருப்பு
5. மாலை
6. ஆபரணம்
7. உடம்பு
8. வலவன்
9. வேதம்
10. வெற்பு

**2.** பின்வரும் சொற் கூட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு சொல் வேறுபட்டது. அச்சொல்லினைத் தெரிவு செய்து, எழுதுக.

1. ஞாலம், தாரை, நிலம், உலகம், குவலயம்
2. இறைவன், ஈசன், துறைவன், கடவுள், முதல்வன்
3. தாய், மாதா, ஆதிரை, அம்மா, ஆய்
4. நீர், அப்பு, சலம், புனல், ஈரம்
5. அல்லல், இடர், நல்குரவு, இடும்பை, இன்னல்
6. தாமரை, அம்புயம், கமலம், ஆம்பல், பங்கஜம்
7. ஆற்றல், உரம், வலிமை, சக்தி, விவேகம்
8. குற்றம், ஆசு, ஏதம், கசடு, பொறை